# ஆண்டவருடைய இரவு விருந்து

## (அருள்பணியாளர் இல்லாதபோது குடும்பங்களில் செபிக்க)

### முன்னுரை

இயேசுவின் பாஸ்கா விழாவை இன்று கொண்டாடுகின்றோம். பாஸ்கா என்றால் 'கடத்தல்' என்று பொருள். பழைய ஏற்பாட்டில் கடவுளின் கனிந்த உள்ளத்தால் பாரவோனின் ஆதிக்கத்திலிருந்தும், அடிமைத் தனத்திலிருந்தும் இஸ்ரயேல் மக்கள் விடுதலையடைந்து கானான் நாட்டை உடைமையாக்கிக் கொண்டனர். அதாவது 'பாஸ்கா' என்ற 'கடத்தல்' நிகழ்வின் வழியாகத் தீமையின் ஆதிக்கத்திலிருந்து கடந்து வந்து நித்தியத்திற்கும் நிலையான இறைவனைப் பற்றிக் கொண்டனர். பழைய ஏற்பாட்டில் பாவத்திற்குக் கழுவாயாக செம்மறியாடுகள் பலியிடப்பட்டன. புதிய ஏற்பாட்டிலோ பாவம் போக்கும் செம்மறியாக இயேசுவே பலியாகின்றார். இயேசு தன்னை உடைத்து, தனது உடலையும் இரத்தத்தையும் நமக்கு உணவாகத் தருகின்றார். உலகின் நோய்க்கு மருந்து அன்பு. அன்புக் கட்டளையைக் கொடுத்து அன்பை ஆடையாய் அணிந்து கொள்ளச் சொன்ன புனித நாள் இன்று. இந்த அன்புக்கு தங்களையே தாரைவார்த்து, அன்பின் ஊழியர்களான குருக்களை ஏற்படுத்திய அன்பின் நாள் இன்று.

இயேசுவைப் போல அன்பு செய்ய வரம் கேட்போம். அரச குருத்துவத் திருக்கூட்டமாய் மிளிர சக்தி கேட்போம். நம் ஆன்ம நோய்க்கு அவரின் விருந்து மருந்தாய் ஆகிட செபிப்போம்.

### வருகைப்பாடல் : அழைக்கிறார் இயேசு ஆண்டவர்

தலைவர் : தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே.

எல் : ஆமென்.

### மனத்துயர் மன்றாட்டு

"உங்கள் தீச்செயல்களே உங்களுக்கும் உங்கள் கடவுளுக்கும் இடையே பிளவை உண்டாக்கியுள்ளன; உங்கள் பாவங்களே அவர் செவிசாய்க்காதவாறு அவரது முகத்தை உங்களுக்கு மறைத்துள்ளன" என்கிறார் இறைவாக்கினர் எசாயா (59:2). ஆம், பாவம் என்பது உறவின் முறிவாகும். இறைவனுக்கும் – மனிதனுக்கும், மனிதனுக்கும் – மனிதனுக்கும்

இடையே உள்ள உறவுகள் பாவத்தால் முறிந்து விடுகின்றன. முறிந்த உறவுகளை மீண்டும் சீர்ப்படுத்த நம் பாவங்களை ஏற்றுக்கொள்வோம்; மனம் வருந்துவோம்; மன்னிப்பு வேண்டுவோம்.

தலைவர் : எல்லாம் வல்ல இறைவனிடமும். . .

எல் : சகோதரர், சகோதரிகளே உங்களிடமும். . .

தலைவர் : ஆண்டவரே இரக்கமாயிரும்.

எல் : ஆண்டவரே இரக்கமாயிரும்.

தலைவர் : கிறிஸ்துவே இரக்கமாயிரும்.

எல் : கிறிஸ்துவே இரக்கமாயிரும்.

தலைவர் : ஆண்டவரே இரக்கமாயிரும்.

எல் : ஆண்டவரே இரக்கமாயிரும்.

(அல்லது)

(சிறிது நேரம் அமைதியாக ஆன்ம சோதனை செய்தல்; பின்னர், மக்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிடுதல்; ஒவ்வொரு பாவ அறிக்கைக்குப் பிறகும் 'நான் பாவி இயேசுவே' என்று பாடவும்).

(அல்லது)

ஏதேனும் ஒரு மனத்துயர் பஜன் பாடல் பாடலாம்.

தலைவர் : உன்னதங்களிலே கடவுளுக்கு மாட்சி உண்டாகுக.

எல் : உலகினிலே நன்மனத்தோருக்கு அமைதி ஆகுக. . .

## திருக்குழும மன்றாட்டு

அருள்பணியாளர் / தலைவர் : இறைவா,

உம் திருமகன் சாவுக்குத் தம்மைக் கையளிக்கும் வேளையில்
நிலைத்து நிற்கும் அன்பின் புதிய பலியையும் திருவிருந்தையும்
தமது திரு அவைக்கு அளித்தார்;
அதனால் இப்புனிதமிக்க திரு உணவில் அடிக்கடி பங்குகொள்ளும்
நாங்கள் இத்துணை மேலான மறைநிகழ்விலிருந்து
அன்பின் முழுமையையும் வாழ்வின் நிறைவையும் பெற்றுக்கொள்ள
அருள்புரிவீராக. எங்கள்...

